REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 30உ வெள்ளி (13—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 31உ சனி (14—5—55) [இதழ் 284


## தனி மாநிலக் கிளர்ச்சி: 53 பேர் கைது!

அமிர்தசரஸ், மே 12—

'பஞ்சாப் மொழி மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவாகக் கோஷங்கள் ஒலிக்கக்கூடாது' என்று இங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை மீறியதாக மேலும் 20 அகாலி தளத்தவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். சென்ற 3 தினங்களாக தொடர்ந்து இதுவரையிலும் மொத்தம் 53 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

# 'பதி பூசை மகா யாக'த்திற்கு எதிர்ப்பு!

## உபயோகமற்ற நிலையில் ரூ. 6 கோடி பொருள்கள்!

### திட்டங்களுக்கான இயந்திரங்கள் சோம்பிக்கிடக்கின்றன

### உபரிக் கருவிகள் கிடைக்கவில்லையாம்

புதுடில்லி, மே. 11—

மின்சார, நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றில் உபயோகப்படுத்துவதற்காக வாங்கப்பட்ட இயந்திரங்களில் 48 சதவிகிதம்—அதாவது, அத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ரூ. 40 கோடி பெறுமானமுள்ள இயந்திரங்களில் ரூ. 6 கோடி பெறுமான இயந்திரங்கள், அவைகளுக்கான சில விசேட உறுப்புகள் கிடைக்காமையால் வேலை செய்யாமல் அப்படியே 'சோம்பி'க் கிடக்கின்றனவாம்.

—இந்தத் தகவலை, பெரிய திட்டங்களில் உபயோகிக்கப்படுவதற்காக வாங்கப்பட்ட இயந்திரங்கள் பற்றிய பரிசீலனைகள் செய்ய இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்டிருக்கிறது.

ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு இயந்திரங்கள் 'சோம்பி'க் கிடப்பதற்கான காரணம், அவற்றிற்குத் தேவையான உபரி உபகரணங்கள், சிறுசிறு பொறிகள் முதலியன தங்கள் சொந்தக் கிடங்குகளிலோ அல்லது கடைகளிலோ கிடைக்காமலிருப்பதுதான் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு, உபயோகமில்லாமல் கிடக்கும் அந்த இயந்திரங்களை உபயோகிப்பதற்கான வாய்ப்பு வெகு விரைவிலேயே இத்திட்டங்களுக்குக் கிடைக்கலாம் என்று கூறுவதற்கில்லை என்றும், இதனால், விரைவில் அந்தப் பொருட்களின் உபயோகம் பற்றி ஒரு முடிவு மேற்கொள்ளப்படாவிட்டால் அவை இனிமேல் எப்போதுமே உபயோகிக்கப்பட இயலாதனவாகி அழிந்து அத்தனையும் நஷ்டத்திற்கிடமாகும் என்றும் அக்குழுவினர் கண்டுபிடித்துக் கூறியுள்ளனர்.

இந்த நிபுணர் குழுவினர் பக்ராநங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு, ஹிராகுட், கங்காபூர், துங்கபத்திரா, கீழ்பவானி ஆகிய திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டபின்னரே இவ்வாறு தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

மேலும் அவர்கள், "நாங்கள் இன்னும் நேரில் சென்று பார்வையிடாத திட்டங்களின் நிலைமைகள் இதையும்விட படுமோசமானவைகளாக இருக்கலாம் என்றே நினைக்கிறோம்" என்றும் கூறியிருக்கின்றனர்.

### அமெரிக்க நெய்: சென்னை வந்துள்ளது

சென்னை துறைமுகத்தில், கப்பல் மூலம் சுமார் 1,100 டன் அமெரிக்க நெய் வந்து சேர்ந்திருக்கிறது.

இந்த நெய் முழுவதும், அமெரிக்காவிலுள்ள 'சர்ச் உலக சர்வீஸ்' என்ற நிறுவனம் ஒன்றின் வெகுமதியாக சென்னை மாநிலத்திலுள்ள பல்வேறு தர்ம நிறுவனங்கள் மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுவதற்சென பிராந்திய உணவு கமிஷனருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

### திரு-கொச்சி உபரி தண்ணீர்

பேச்சுவார்த்தை நடத்த முடிவு

மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து உற்பத்தியாகி திரு—கொச்சி மாநிலத்தில் செல்லும் நதிகளில் வீணாகும் உபரித் தண்ணீரை திரு-கொச்சி, சென்னை ஆகிய இரு மாநில சர்க்கார்களும் தங்கள் தங்கள் நீர்ப்பாசனத்திற்கும், நீர் விசை மின்சாரத் திட்டங்களுக்கும் பயன்படுத்திக் கொள்வதுபற்றிய பிரச்சினைகள் குறித்து அடுத்த மாதத்தில் இரு மாநில சர்க்கார்களுக்குமிடையில் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தைகளின் போது பரிசீலிக்கப்படும் என்று தெரிகிறது.

## 'ஜீவனும்சம் கோரும் கணவன்மார்களின் காலைக் கழுவி நீரைக் குடிப்பதா?'

### 'மன்னித்துவிடுக! மறந்துவிடுக!'

கொத்தலாவலையிடம் ஆச்சாரியார் மன்றாடுகிறார்

கொழும்பு, மே 12—

பாண்டுங் மாநாட்டில், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை நடந்துகொண்ட போக்கு பற்றி சென்னை தமிழ் வார இதழ் ஒன்றில், ஆச்சாரியார், கொத்தலாவலையை 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்று வர்ணித்து எழுதியதும், 'வயது முதிர்ச்சியினால், குழம்பிய மூளையிலிருந்து வெளிவந்த வாசகங்களே அவை,' என்று கொத்தலாவலை பதிலுக்குக் கூறியதும் நினைவிலிருக்கலாம்.

இப்போது ஆச்சாரியார், 'மன்னித்துவிடுக! மறந்துவிடுக! என்னுடைய தவறுக்காக வருந்துகிறேன்,' என்று கொத்தலாவலைக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதி மன்னிப்புக் கோரி மன்றாடியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தனது விமரிசனத்திற்கு, கொத்தலாவலை தந்த பதிலில் இருந்த பெருந்தன்மை, தனது குற்றத்தை இரண்டு மடங்காக்கிவிட்டதாகவும் ஆச்சாரியார் கூறியிருக்கிறார்.

மன்னிப்புக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட இலங்கைப் பிரதமரும், 'நீங்கள் எத்தனை மகிழ்வான கடிதம். அனுப்பியுள்ளீர்கள்? தாங்கள் என்னைக் குறைகூற வேண்டும் என்று அவ்வாறு எழுதவில்லை என்பதை நான் உணர்கிறேன்,' என்று பதில் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

### லக்னோ தாய்மார்கள் கண்டனம்

புராண கால வழக்கம் புதுப்பிக்கப்படுவதேன்?

லக்னோ, மே 13—

கோமதி ஆற்றங்கரையில் 'பதி பூசை யக்ஞம்' நடத்திய பெண்களின் செயல் கண்டு, பெண்கள் பலர் பொங்கி எழுந்துள்ளனர் எனத் தெரிகிறது.

புராண காலத்திற்குப் பிறகு முதன் முறையாக, ஆசார அனுஷ்டானங்களுடன், கணவர்களைத் தெய்வமாக்கி, அவர்கள் பாதங்களில் மலர் தூவி, நூற்றுக்கணக்கான பெண்கள் மண்டியிட்டுத் தொழும் 'பதி பூசை,' கடந்த சின்னாட்களுக்கு முன் சேஷாஜி மகாராஜ் என்ற சன்னியாசி புராண மந்திரங்கள் ஓத, அவர் யோசனைப்படி நடந்ததாக செய்தி வந்தது அல்லவா?

பெண்கள் பள்ளித் தலைமை ஆசிரியையான பெண்மணி ஒருவர், "பெண்களிடமிருந்து ஜீவனும்சம் கோருவது போதாதென்று, கணவர்கள் தங்களின் கால்களைக் கழுவி அந்த அசுத்த நீரையும் பருக வேண்டுமென எதிர்பார்க்கின்றனர் போலும்!" என்று கடிந்திருக்கிறார்.

சரித்திரத்தில் கண்டிராத வகையில் பெரும் அளவில் நடைபெறும் இந்த 'பதியக்ஞ'த்தைக் கண்டித்து பெண்களுக்கான பல்வேறு நிறுவனங்களும், முறையான எதிர்ப்புக் கிளப்பவிருக்கின்றனர் என்று தெரிகிறது.

"புனிதமான இந்த யாகம், மணவிலக்குக்கோருவதை ஒழிக்கும்" என்று யாகத்தை நடத்திவரும் சேஷாஜி மகாராஜ் என்ற 'சன்னியாசி' கூறுகிறாராம்!

ஐந்து நாட்களுக்கு நடைபெறும் இந்த யாகத்திற்கு ஆதாரமாக, 'ஜீ கிருஷ்ண ஜன்ம கண்டா' என்ற 'பிரம்ம வைவர்த' புராணத்தின் ஒரு பகுதியான 83-வது பிரிவைச் சுட்டிக்காட்டுகிறாராம், அவர்!

'பதிவிரதா தர்மம்' என்ற கொள்கையை 'கிருஷ்ண பரமாத்மா' வெளியிட்ட பின்பு, துவாரகையிலிருந்த பெண்கள் எல்லோரும் தங்கள் கணவன்மார்களை இம்மாதிரி 'துதி'த்ததாகவும் அவர் கூறுகிறாராம்!

இந்த யாகம் நடைபெறுகையில், 'விஷ்ணு பரமாத்மா'வுக்கு முன்னிலையில் அக்கினி வளர்ப்பதற்காகத் தினந்தோறும் 5 மணங்கு நெய், எண்ணெய், வெல்லம், சந்தனக் கட்டை முதலியன உபயோகிக்கப்படுகிறதாம்!

சுமார் 61 குருக்கள்மார், இந்த யாகத்தை உடனிருந்து நடத்துகின்றனராம்!

இதற்கிடையில், 'லக்னோ நகரவாசி' என்ற பெயரில் ஒருவரும், 'புனித மனிதர்'கள் எனப்படுவோரும் துண்டுப் பிரசுரங்களால், இந்தச் சம்பவம் பற்றி ஒருவரையொருவர் தாக்கிக்கொள்கின்றனராம்.

இனந் தெரியாமல், 'லக்னோ நகரவாசி' என்ற பெயரில்—யாகத்திற்கு எதிராக இயக்கம் நடத்துபவர்—"அந்த யாகம் வேத ஆகமங்களுக்கு முரண்பாடானது," என்று கூறுகிறாராம் — தனது துண்டுப் பிரசுரத்தின் மூலம்!

யாகம் நடைபெறும் இடத்தைச் சுற்றியிருந்த போலீஸ் பட்டாளத்தை சர்க்கார் அகற்றிவிட்டனராம்!

அமைதிக்கு உலைவைக்கும் சம்பவங்கள் நிகழுமென எதிர்பார்க்கப்படவில்லையாம்!

### அங்கேயும் கூட!

பிரிட்டிஷ் கயானாவில் இந்து முறைப்படி நடக்கும் திருமணங்களை சட்ட சம்மதமாக்குவதற்கான சட்டமொன்றை கயானா சர்க்கார் கூடிய சீக்கிரமே இறற்றப்போவதாகத் தெரிகிறது.

## 'இலஞ்சக் குற்றம் புரிவோருக்குக் கடுந்தண்டனை விதிக்க வேண்டும்'

### ஐ.சி.எஸ். ஐயரின் 6 மாத வெறும் காவல் இரண்டாண்டு கடுங்காவலாகியுள்ளது

"இலஞ்சக் குற்றங்கள், நிரூபிக்கப்படுவதற்குக் கடினமானவை; ஆனால், இப்படி ஒரு குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டால், அந்தக் குற்றம் புரிந்தவருக்கு அவர் செய்த குற்றத்தின் அளவைப் பொறுத்தும், சர்க்கார் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையின் அளவைப் பொறுத்தும் தண்டனை தரப்பட வேண்டும்.

"இந்த வழக்கில், குற்றவாளிக்கு ஏற்கனவே தரப்பட்டுள்ள தண்டனை போதுமானதல்ல; இன்னும் கடுமையான தண்டனை தரவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

"தரப்பட்ட ஆறு மாதத் தண்டனை முற்றிலும் போதுமானதல்ல; குற்றத்தின் அளவைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, சரியான நீதி வழங்கப்பட வேண்டுமானால், குற்றவாளிக்கு குறைந்த பட்சம் இரண்டு ஆண்டு தண்டனையாவது தரவேண்டும் என்று கருதுகிறேன்; அவ்வாறே உத்திரவிடுகிறேன்,"

—என்று, மத்திய அரசாங்க வர்த்தக, தொழில் இலாகா முன்னாள் செயலாளரான எஸ். ஏ. வெங்கட்ராமன் என்ற பார்ப்பன அதிகாரி, தமக்கு, டெல்லி தனி நீதிபதி இலஞ்சக் குற்றம் புரிந்ததற்காகத் தந்த ஆறுமாத வெறுங்காவல் சிறை தண்டனையை ரத்து செய்யக் கோரி பஞ்சாப் உயர் நீதிமன்றத்தில் செய்துகொண்ட 'அப்பீலை' நிராகரித்து, நீதிபதி ஜி. டி. கோஸ்லா தீர்ப்பு வழங்குகையில் கூறியிருக்கிறார்.

அந்த அதிகாரிமீது, அவர் பதவியிலிருந்த காலத்தில், இரண்டு பம்பாய் நிறுவனங்களுக்கு, இலஞ்சம் பெற்றுக்கொண்டு சலுகை காட்டியதாக இலஞ்சத் தடுப்புச் சட்டம் 5-ம் பிரிவின்கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த டெல்லி தனி நீதிபதி, அவருக்கு ஆறு மாத வெறுங் காவல் தண்டனை விதித்திருந்தார்.

அதை எதிர்த்தே அதிகாரி பஞ்சாப் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தார்.

இப்போது, பஞ்சாப் உயர்நீதி மன்றம் தந்த இரண்டு வருட கடுங்காவல் தண்டனையை எதிர்த்து டெல்லி தலைமை உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்ய அவரது வழக்கறிஞர் அனுமதி கோரினார்; ஆனால், அப்பீல் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—5—'55 வெள்ளி


# ஏன் இந்த எரிச்சல்?

மானிடராய்ப் பிறந்த எல்லோருக்கும் இதயம் உண்டு; உணர்வுகள் உண்டு; ஆசை அபிலாஷைகள் உண்டு; இலட்சியமும் இருக்கலாம்.

ஏழை—பணக்காரன், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வுகள், மதம், மொழி, இனம், கலை, பண்பு, நாடு இவற்றின் மாறுபாடுகள் எல்லாவற்றையும் கடந்து, உலகத்து மக்கள் எல்லோருக்கும், இதயம், உள்ளுணர்வு, ஆசைகள், இலட்சியங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இதயம், உணர்வு, ஆசை, அபிலாஷை, இலட்சியம்—இவையெல்லாம் வேண்டுமானால், ஒவ்வொரு தனி மனிதனுக்கும்கூட வேறுபட்டனவாயிருக்கலாம்; ஆனால் இவையெல்லாம் எல்லா மனிதர்க்கும் உரியவை.

ஆனால், பணக்காரர்களுக்கு, ஏழைகளுக்கு இதயம் இருப்பதாகவே தெரியாது. உயர்ந்தவர்கள் எனப்படுவோருக்கு தாழ்ந்தவர் எனப்படுபவர்கள் அத்தனை பேரும் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாகவே தோன்றுவர்!

ஒரு மதத்தைச் சார்ந்தவருக்கு, இன்னொரு மதத்தைச் சார்ந்தவர் தாழ்ந்தவராகவே தோன்றுவார். அப்படியேதான், பல மொழி, பல இன, பல நாகரிகங்கொண்ட மக்கள் ஒருவரை ஒருவர் தாழ்வாக எண்ணுவதும், 'பிறரும் நம்மைப் போல்தானே!' என்ற எண்ணமற்றவராய் இருப்பதும் இன்றைய உலகில் மலிந்து காணப்படுகிறது.

"எல்லோரும் மனிதர்கள் தானே! அவர்களுக்கும் நம்மைப் போன்றே, உள்ளமும், அதில் உதிக்கும் ஓராயிரம் எண்ணங்களும் உண்டே!' என்ற உயர்ந்த எண்ணம், பிறரையும் தன்னைப்போல் கருதும் உயரிய உள்ளம் இன்றைய மனித சமூகத்தின் சிறுபான்மைப் பிரதிநிதிகளிடம்கூட இருக்கவில்லை.

'இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளாவிட்டால் உயர்ந்த அரசாங்க உத்தியோகம் கிடைக்காது,' என்பதற்காக—இந்தியப் பேரரசின் அது பற்றிய உத்தரவிற்கு எதிராக, தமிழ் நாட்டிலிருந்து கண்டனக் குரல் கிளம்பியுள்ளது.

இந்தக் கண்டனக் குரல்கூட, தென்னாட்டு மொழிமீது தங்களுக்கு இருக்கும் பற்றின் காரணமாக, அதன் பெருமை குலைக்கப்படக் கூடாது என்பதற்காகக்கூட அல்லாமல், தாங்கள் இதுவரை ஏகபோகமாக வேட்டையாடி வந்த உத்தியோகத் துறையில் இந்தி புகுத்தப்படுவதினால், தங்களுக்கு ஏற்படவிருக்கும் நஷ்டத்தைக் கணக்கிட்டு எழுப்பப்பட்ட கண்டனக் குரல்தான்!

இந்தக் கண்டனத்தைக் கண்டே, வடநாட்டு இந்தி வெறியர்கள் சீற்றம் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது.

'நாங்கள் வேறு—நீங்கள் வேறு; எங்களை நாங்களே ஆள்வோம்—நீங்கள் யார் எங்களை ஆளுவதற்கு?' என்று, திராவிடத் தனி அரசுக்காக உரிமை முரசு கொட்டும் நாம்—'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ்,' என்று எண்ணிக் கிடக்கும் நாம்—'எங்கள் தாய் மொழி தமிழுக்கு இருக்கும் சிறப்புகளில் எள்ளத்தனையும் பெற்றில்லாத இந்த மொழி எங்கள் நாட்டில் ஆதிக்கம் பெறுவதை ஏற்றுக் கொள்ள எப்படி இயலும்?' என்று கேள்வி எழுப்பும் நாம்—இப்போது புகுத்தப்படும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பினால், அந்தக் கண்டனம் கேட்டு, வடநாட்டு இந்தி வெறியர் என்ன செய்வார்களோ தெரியவில்லை.

இப்போதுஎழுந்துள்ள கண்டனம் கண்டு, வடநாட்டு இந்தி வெறியரின் வக்கரிப்பு எந்த அளவு சென்றிருக்கிறது என்றால், 'வடநாட்டில் ஆங்கிலத்தை அறவே அகற்றிவிடுவது,' என்று கூச்சலிடுகிற அளவுக்குச் சென்றிருக்கிறது. எரிமேல் கோபங்கொண்டு, எவனோ ஒருவன், செய்ய வேண்டிய ஒன்றைச் செய்யாமலே சென்றதாக பழமொழி உண்டு, இங்கு! அதனால் எரிக்கு என்ன நஷ்டம்? அதுபோன்றே, இந்தியை எதிர்க்கும் தமிழ் நாட்டவர் மீது கோபங்கொண்டு, ஆங்கிலத்தை அறவே கைவிடப் போகிறார்களாம், இந்தி வெறியர்கள்! நஷ்டம் அவர்களுக்குத்தானேயன்றி, ஆங்கிலத்திற்கு அல்லவே!

இந்தி பற்றி அரசியல் சட்டத்தில் உள்ள விதிகளையும், குறிப்புகளையும்கூட அகற்றிவிட சிபாரிசு செய்யத் தயாராயிருக்கின்றனராம், இந்த இந்தி வெறியரில் சிலர்!

அவர்களின் இந்த 'எரிச்சல்,' 'எப்படியேனும், இந்தி பேசாத இதர மக்கள் மீது இந்தியைத் திணித்துவிடவேண்டும்,' என்ற நோக்கத்தையும், 'தங்கள் மொழிக்கு மட்டும் எப்படியேனும் எல்லோரையும் ஆளும் ஏற்றம் கிடைத்துவிட வேண்டும்,' என்ற ஆசையையும் தான் வெளிப்படுத்துகின்றது!

வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு ஏற்பட்டிருப்பதைப் போலவே, திராவிடர்களுக்கும் மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் இருக்குமென்பதை அவர்கள் மறந்துவிட்டிருக்கின்றனர். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மொழி வெறி இந்த நாட்டவருக்கும் ஏற்படக் கூடாததல்ல—ஏற்பட முடியாததுமல்ல!

அவ்வாறு, இங்குள்ளோர் மொழி வெறிகொண்டுவிட்டால், வட நாட்டவரின் நிலை என்னவாயிருக்கும் என்பதை அனுபவம் தான் அவர்களுக்கு உணர்த்த முடியும்!

இப்போது எழுந்துள்ள சிறு எதிர்ப்புகண்டே வடவர் எரிச்சல் கொள்ளுவது, திராவிடரிடம் வளர்ந்து வரும் மொழிப் பற்றை, படிப்படியாக வெறியாக மாற்றிவிடத் துணை செய்வதாக முடியும்.

'திராவிடர்கள் மொழி வெறிகொள்ளும் காலத்தை, வடநாட்டு இந்தி வெறியர்கள் சுருக்கிக்கொண்டு வருகின்றனர்,' என்பதைத்தான் அவர்கள் போக்கு காட்டுகிறது!

வடநாட்டு இந்தி வெறியர் உணரவேண்டும்—அவர்களைப் போலவே தென்னாட்டவருக்கும் இதயம், உணர்வு, இவையெல்லாம் உண்டு என்பதை!

## நெய்வேலி தொழிலாளர் நிலை

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திற்கு, தொழிலாளர் வேலை நிலை பற்றிய நிரந்தரச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளதாம்.

திட்டப்பகுதியில் தொழிலாளர்களுக்கான வேலை நிலை பற்றிய நிரந்தர விதிகளை சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கின்றனர். இவ்விதிகளின்கீழ் பலவகைப்பட்ட தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதங்களையும் சர்க்கார் நிர்ணயித்துள்ளனராம்.

## திரு-கொச்சில் மற்றுமொரு டி. டி. டி. தொழிற்சாலை

திரு-கொச்சி மாநிலத்தில், பூச்சிகளைக் கொல்வதற்கான மற்றொரு டி. டி. டி. மருந்து உற்பத்தி செய்யும் சர்க்கார் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமாம். இத்தொழிற்சாலை நிறுவ மொத்தம் ரூ. 75 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருப்பதாகவும், இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 1,400 டன் டி. டி. டி. மருந்து உற்பத்தி செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

# 'ஆட்சி பீடத்தில் மீண்டும் ராணு பரம்பரையினர்!'

## நேபாளத்தில் முடியாட்சிக்கு எதிராக 'ஜனநாயகக் குரல்'

★

நேபாளத்தில் ஆலோசனை சபை தொடர்ந்திருக்க வேண்டுமா? அல்லது அதனை என்ன செய்வது? சர்க்காரின் அமைப்பு எப்படி இருக்க வேண்டும்? பொதுத் தேர்தல்கள்—ஆகியவை பற்றி கருத்தறிவிப்பதற்காக நேபாள மன்னரான மகேந்திர வீர விக்ரம் கூட்டிய சமூக, அரசியல் இயக்கங்களின் மாநாட்டில் நான்கு முக்கிய கட்சிகள் பங்கு பெறவில்லை. அவை மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்துவிட்டிருக்கின்றன.

மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகள், நேபாளத்தில், ஜனநாயக ஆட்சி வேண்டும் என்றும், பொதுத் தேர்தல்கள் சீக்கிரமே நடைபெற வேண்டும் என்றும், ஆலோசனை சபையை கலைத்துவிடவேண்டும் அல்லது திருத்தி அமைக்கவேண்டும் என்றும் கோரியிருக்கின்றனர்.

நேபாள காங்கிரஸ், பிரஜா பரிஷத், நேபாள தேசியக் காங்கிரஸ், ராஷ்டிரிய பிரஜா கட்சி என்ற நான்கு முக்கிய அரசியல் கட்சிகளும் மாநாட்டைப் புறக்கணித்துவிட்டன.

மாநாட்டிற்கு வந்திருந்த ஒரு பிரதிநிதி, "நேபாளத்தின் ஆட்சி, பிற்போக்கு வாதிகளான ராணு பரம்பரையினரிடம் மீண்டும் சிக்கிவிட்டது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டைப் புறக்கணித்த நான்கு கட்சிகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், "நேபாளத்தில் மன்னரின் நேரடி ஆட்சி இருப்பது, நவீன கால முன்னேற்ற நலன்களுக்குப் புறம்பானது மட்டுமின்றி, ஜனநாயகத்திற்கும் விரோதமானதாகும்; எனவே, அந்த ஆட்சி கணம் கூடத் தாமதிக்கப்படாமல் ஒழிக்கப்படவேண்டும்," என்று கூறியுள்ளன.

# காஷ்மீரில் பொது வாக்கெடுப்பு இருக்காதாம்!

## நாட்டைத் துண்டாட பாகிஸ்தான் கோருமாம்!

ஸ்ரீநகர், மே 12—

தான் விரும்பும் வகையில், காஷ்மீர் பிரச்சினையில் பொது வாக்கெடுப்புக்கான ஏற்பாட்டிற்குக் காலங்கடந்துவிட்டதாகவும், புதிய நிலைக்கேற்பத் தனது கருத்தையும் மாற்றிக்கொள்ள பாகிஸ்தான் தீர்மானித்திருப்பதாகவும், இங்குள்ள நிலைமையிலிருந்து யூகிக்க இடமேற்பட்டு இருக்கிறது

எனவே, காஷ்மீரை இரு கூறுகளாகப் பிரிப்பதை மூலமாகக் கொண்டு செய்யப்படும் உடன்பாட்டைக் குறித்து, பாகிஸ்தான் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறதாம். இக்கருத்துக்கு, தனது மக்களின் ஆதரவு இருக்காது என அஞ்சுவதால், பாகிஸ்தான் அரசாங்கம் இதனை வெளிப்படையாகக் கூறத் தயங்குகிறதாம்.

இந்தியப் பிரதமரை சந்திக்க டெல்லிக்குப் போவதால், ஏதாவது சாதகமான பயன்கிடைக்குமென நிச்சயமாகத் தெரிந்தாலல்லாது, பாகிஸ்தான் பிரதமர் டெல்லி செல்வதை ஏற்றுக்கொள்வது கடினம் என்று நம்பப்படுகிறது.

அங்குள்ள சூடான் மலைஜாதியினர் உயர்த்திய கலகக் கொடிதான் 1947-ல் ஏற்பட்ட 'ஆசாத் காஷ்மீர்' அமைப்புக்கு அடிப்படை என்றும், கலக உணர்ச்சியுடன் சூடான் மலை ஜாதியினர் உள்ள வரை காஷ்மீர் பிரச்சினையில் முடிவு காண்பது பாகிஸ்தான் பிரதமரால் இயலாது என்றும், அப்பகுதியில் பாகிஸ்தான் ஆதிக்கம் செலுத்தும் முயற்சியை சூடான் மலை ஜாதியினர் எதிர்க்கத் துணியும்பட்சத்தில் பொது வாக்கெடுப்பால் பாகிஸ்தானுக்கு நன்மை ஏற்படாது என்றும் இங்குள்ள அரசியல் நிலையிலிருந்து யூகிக்கப்படுவதாக பம்பாய் ஆங்கில தினசரி தகவல் தந்திருக்கிறது.

## தஞ்சையில் கலைக் கல்லூரி

ஜூன் மாதம் துவங்கும்

கண்காட்சிமூலம் ரூ.50,000வசூல்

தஞ்சை, மே. 12—

கலைக் கண் காட்சி நடத்தியதினால் கிடைத்த தொகையிலிருந்து ரூ. 50,000-த்திற்கான 'செக்' ஒன்றை, கலைக் கண்காட்சி பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கிய நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர், தஞ்சை கலைக் கல்லூரி அமைப்புக் குழுச் செயலாளரான கே. வி. சீனிவாச அய்யரிடம் தந்தார்.

கண் காட்சிக் குழுவின் தலைவரும், தஞ்சை மாவட்ட கலெக்டருமான சி. ஏ இராமகிருஷ்ணன், சென்னை சர்க்காரில் பிரதம எஞ்சினியராக இருந்து ஓய்வு பெற்றுள்ள என். சுவாமிநாத அய்யர், சுமார் ரூ. 4,500 பெறுமான இரண்டு ஏக்கர் 52 செண்ட் நிலம் ஒன்று, நன்கொடை வழங்கியிருப்பதாக அப்போது அறிவித்தார்.

கல்லூரிக்கான கட்டிடம் கட்டுவதற்கிடையில், வரும் ஜூன் 22-ந் தேதியன்று 'சங்கீத மகால்' எனும் மாளிகையில் கல்லூரி துவங்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## விசால அசாம்

மாநில புனரமைப்புக் குழுவிடம் முறையீடு

கௌஹாத்தி, மே. 18—

மேற்கு வங்கத்தில் உள்ள காச்பீகார், ஜல்பைகுரி, டார்ஜீலிங் மாவட்டங்கள், திரிபுரா, மணிப்பூர் மாநிலங்கள் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து; 'விசால அசாம்' மாநிலம் அமைக்க வேண்டுமென, மாநில புனரமைப்புக் குழுவிடம், ஏழு தனித் தனி சமூக, அரசியல் இயக்கங்கள், முறையிட்டுள்ளன என்று தெரிய வருகிறது.

இம்மாதிரி 'விசால அசாம்' மாநிலம் அமைத்தால் அங்கு வாழும் அசாம் மொழி பேசாத மக்கள் விரும்பினாலன்றி அவர்கள் மீது அசாம் மொழி கட்டாயமாகத் திணிக்கப்படாது என்றும், அசாமில் உள்ள எல்லா மொழி பேசும் மக்களுக்கும் பாதுகாப்புத் தரப்படும் என்றும் சிலர் மாநில புனரமைப்புக் குழுவிடம் உறுதி தந்தனராம்.

மேற்கு வங்கத்தில் காச்பீகார், ஜல்பைகுரி, டார்ஜீலிங் மாவட்டங்களில் வாழும் மக்களின் கருத்தறிய ஒரு வாக்கெடுப்பு நடத்தலாம் என்று சிலர் யோசனை கூறிய போது, அம்மாதிரி சிபாரிசு செய்கிற அதிகாரமெதுவும் தங்கட்கு இல்லை என்று மாநில புனரமைப்புக் குழுவினர் தெரிவித்தனராம்.

மலைப் பகுதிகளை ஒன்றாக இணைத்து, தனி மாநிலம் வேண்டுமென்ற கோரிக்கையை சிலர் வன்மையாக எதிர்த்தனர் என்றும் கூறப்படுகிறது.

## போலீஸ் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு

மேற்கு வங்க சர்க்கார் முடிவு

கல்கத்தா, மே. 12—

மேற்கு வங்க போலீஸ், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், சார்ஜண்ட்கள் ஆகியோரது சம்பள விகிதங்களை கல்கத்தா நகர போலீஸ் அதிகாரிகள் சம்பள அளவுக்கு உயர்த்துவது என அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

இதனால் ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு ரூ. 1,28,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

## செங்கற்பட்டுமாவட்டத்தில் பஸ் போக்குவரத்து

அதிகரிப்பதற்கு நிபந்தனை

செங்கற்பட்டு, மே 9—

நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவிற்கும் அதிகமாக பஸ்களில் தொடர்ந்து 'விடாப்பிடி' யாகப் பிரயாணிகள் ஏற்றிச் செல்லப்படுகிறார்கள் என்பதை ஆதாரத்துடன் நிரூபித்து பஸ் பர்மிட்டுகளை வழங்க வேண்டுமென்று பிரதேச போக்குவரத்து அதிகாரி சிபாரிசு செய்வாரானால், பஸ் பர்மிட்டுகளை 10 சதவிகிதம் உயர்த்துவது பற்றி செங்கற்பட்டு பிராந்திய போக்குவரத்து அதிகார நிறுவனம் ஆலோசிக்குமென்று சென்ற 2-ந் தேதியன்று நடைபெற்ற மேற்படி நிறுவனத்தின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

# நாகர் விடுதலைக் குழு தலைவர்கள் கைது!

## பர்மிய அரசாங்க உதவியின் உருபலன்!

ஷில்லாங், மே. 10 —

நாகர் விடுதலைக் குழுவைச் சேர்ந்த தீவிரவாதத் தலைவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

பர்மிய அரசாங்கத்தின் உதவியுடன், அஸ்ஸாம் ஆயுதப் படையினர் மேற்படி தலைவர்களைக் கைது செய்துள்ளனர்.

நாகர் சுதந்திரக் குழுவின் பெருந் தலைவனான ஜாபி பிஷோ இன்னும் கைது செய்யப்படவில்லை.

நாகர் விடுதலைக் குழுவின் தீவிரவாதத் தலைவர்களைப் பிடிக்கும் நோக்கத்துடன் வடகிழக்கு எல்லைப்புற அதிகாரம், அசாம் ஆயுதப் படையினர் உதவியுடன், அப்பகுதிகளைத் தீவிரமாகத் துழாவியது. மேற்படி குழுவின் மூல கலகக்காரர்கள் பலர், கைது ஆகாமல் தப்புவதற்காக, பாட்கோயி மலைத் தொடர்களைக் கடந்து பர்மா எல்லைக்குள் நுழைந்துவிட்டனர்.

எல்லையோரங்களில், பர்மா இராணுவத்தின் ஒத்துழைப்புடன் இந்திய இராணுவம் கலகக்காரர்களைத் தேடத் தொடங்கியது அதன் விளைவாக மேற்படி கைது நிகழ்ந்திருக்கிறது.

## மைசூர் முதலமைச்சர் தயார்தானும்!

பாலாறு தண்ணீரைப் பங்கிட்டுக்கொள்வது சம்மந்தமாக மைசூர், சென்னை மாநில சர்க்கார்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் புகார்கள் குறித்துப் பூரணமாக விசாரணைகள் நடத்தத் தாம் தயாராக இருப்பதாக மைசூர் முதல் அமைச்சர் அனுமந்தையா கூறியிருக்கிறார்.

இப்பிரச்சினை குறித்து டில்லியில் மைசூர் முதலமைச்சருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகவும், ஒப்பந்தம் மீறப்பட்டிருந்தால் அதைச் சரிகட்டிக்கொள்ள தாமும் தயாராக இருப்பதாகக் கூறியதாகவும் சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

மத்திய சர்க்காருக்கு தெரிவிக்கு முன்னமேயே, இப்பிரச்சினை குறித்த நடவடிக்கைகள் தமது கவனத்திற்குக் கொண்டுவரப்படாதது குறித்து மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா குறைபட்டுக் கொண்டதாக அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

## பாகிஸ்தானில்

### புதிய அரசியல் நிர்ணய சபை

சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ந் தேதியன்று, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்து பாக். கவர்னர்—ஜெனரல் பிறப்பித்த உத்தரவு சட்ட பூர்வமானதேயாகும் என்று, பாகிஸ்தான் பெடரல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

பெடரல் நீதி மன்றத்தின் தீர்ப்பின் காரணமாக புதிய அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கான வசதி ஏற்பட்டுள்ளதென்று பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல் சார்பில் பிரதமர் முகமதுஅலி வானொலி மூலம் தெரிவித்திருக்கிறார்.

### மாவட்டந்தோறும் தொழிற் பயிற்சி நிறுவனமாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதில் ஏராளமான அளவில் தொழிற் பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுவார்கள் என்று சர்க்கார் உணர்ந்து, அதற்கேற்ப மாவட்டங்கள் தோறும் பல தொழிற் பயிற்சி நிறுவனங்கள் அமைக்க மாநில சர்க்கார் விரும்புவதாக மாநில விவசாய அமைச்சர் பக்தவத்சலம், சென்னை வேப்பேரி செங்கல்வராயன் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற மாணவர் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## புதிய திட்டம்: ரஷ்யா தருகிறது

ஆயுத ஒழிப்பை மேற்கொள்வதற்கான புதுத் திட்டம் ஒன்றை சோவியத் சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

அணு சக்தித் துறையில் அனுபவமுள்ள நாடுகள், பிறநாடுகளுக்கு சமாதான காரியங்களுக்கு தொழில், விஞ்ஞான உதவியளிக்க வேண்டும்; அணு ஆயுத ஒழிப்பை மேற்பார்வையிட சம்மந்தப்பட்ட நாடுகளில் 'சர்வதேசக் கட்டுப்பாடு நிறுவனம்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

மேற்குறித்த இந்த முறைகள் தான் சோவியத் அறிவித்துள்ள புதிய திட்டத்தின் இரு முக்கிய அம்சங்கள் என்று கூறப்படுகிறது.

## சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறு

ஆந்திரா—சென்னை மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறு பற்றி சுமூகமான ஏற்பாட்டிற்கு வர இரு மாநிலங்களின் பிரதிநிதிகளின் கூட்டம், இவ்வாண்டு ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சென்னை—ஆந்திரா மாநில எல்லைத் தகராறுகளை மத்திய சர்க்காரின் தலையீடு இல்லாமலேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நம்புகிறாராம்.

இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முடியாவிட்டால்தான் மத்திய சர்க்காரின் உதவி நாடப்படுமென்றும், இரு மாநில சர்க்காரும் தங்களுக்குள் ஒரு சுமுகமான முடிவிற்குவரமாட்டார்கள் என்றுகருதுவதற்கு இடமே இல்லை என்றும், அமைச்சர் மேலும் கூறியிருக்கிறார்.

சித்தூர் மாவட்டத்திலுள்ள திருத்தணிபுத்தூர், சித்தூர், திருப்பதி, குப்பம் ஆகிய தாலுகாக்களில் தமிழ் பேசுவோர் பெரும்பான்மையினராக உள்ளனர் என்றும், இந்த தாலுகாக்கள் பற்றி ஒரு முடிவு செய்வதற்காக எல்லைக் குழு நியமிக்க வேண்டுமென்று மாநில புனரமைப்புக் குழுவிடம், முன்பு சென்னை மாநில சர்க்காரும், தமிழ் நாடு காங்கிரஸ் குழுவும் கோரிக்கைகள் தந்திருக்கின்றன.

இதுபோலவே ஆந்திர சர்க்காரும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சில தெலுங்கு பேசப்படும் பகுதிகள் உள்ளன என்றும், அவை ஆந்திர மாநிலத்துடனே இணைக்கப்பட வேண்டுமென்றும் மாநில புனரமைப்புக் குழுவிடம் கோரியுள்ளதாம்.

* * *

## சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகள்

சித்தூர் மாவட்டத்தில் குப்பம் தாலுகாவிலுள்ள தமிழ் மொழி பேசப்படும் கிராமங்களை சென்னை மாநிலத்துடன் இணைப்பதற்கான ஆலோசனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது விஷயமாகச் சித்தூர் மாவட்டக் கலெக்டர் இத்திங்கள் 12, 13-ந் தேதிகளில் இப்பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து அவற்றைப் பார்வையிடுவார் என்றும் கூறப்படுகிறது.

## குண்டா திட்டம் அங்கீகாரம்

### மத்திய சர்க்காரிடம் நிதியமைச்சர் சுப்பிரமணியம் வற்புறுத்தினாராம்

சென்னை, மே 10—

குண்டா நீர்விசைத் திட்ட அமுலை உடனடியாக அனுமதிக்குமாறு சென்னை சர்க்கார் கேட்டுக் கொண்டிருந்ததின் பேரில் மத்திய சர்க்கார் தனது முடிவை சீக்கிரமே தெரியப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

நீர்விசை மின்சாரத் திட்டங்களை அமுல் செய்வது சம்மந்தமாக சென்னையின் உரிமைகளை, டில்லியில், மத்திய திட்ட அமைச்சருடன் ஆலோசனை நடத்துகையில் தாம் வலியுறுத்தியதாக சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

## உப்பு உற்பத்திக்கு சலுகைகள்

புதுடில்லி, மே 11—

'சிறிதளவு உப்பு உற்பத்தி' சம்பந்தமாக மத்திய சர்க்கார் சில சலுகைகள் வழங்கியுள்ளதாகவும், இச்சலுகைகள் வருகிற 15-ந் தேதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப் படும் என்றும் தெரிகிறது.

தற்போதுள்ள லைசென்ஸ் முறையின் கீழோ, அல்லது தனிப்பட்ட நபர்களோ அல்லது குழுக்களோ, சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ள இடங்களில் தாராளமாக எந்த முறையை வேண்டுமானாலும் கையாண்டு உப்பு உற்பத்தி செய்யலாம்; ஆனால் அந்த உற்பத்திக்காக அமைக்கப்படும் உப்பளத்தின் நிலப்பரப்பு 10 ஏகருக்கு மேல் இருக்கக்கூடாது; 'லைசென்சு'ம் தேவையில்லை; அதற்காக சர்க்கார் அதிகாரிக்கு மனுப் போடவும் தேவையில்லை என்பதே அச்சலுகைகளில் முக்கியமானதாகத் தெரிகிறது.

மேலும், லைசென்ஸ் முறையின் கீழ் ஏற்கனவே வந்திருப்போரும், மேலே கூறப்பட்டு வரவிருக்கும் சலுகையின் பேரில் உப்பு தயாரிப்போரும் 'செஸ்' வரி செலுத்த வேண்டியதில்லை என்பதும், அச்சலுகைகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சுகாதாரத்திற்குப் பாதகமான முறையிலிருக்கும் உப்பு விற்பனை செய்யப்படுவதை அனுமதிக்காமலிருக்கக்கூடிய உரிமை சர்க்காருக்கு இருக்குமாம்.

## அவர்களுடையது அல்ல!

சென்னை, மே 12—

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகள் காங்கிரசின் சாதனைகள் அல்ல; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரரேபணைகளும் காங்கிரசின் பிரரேபணைகள் அல்ல; அ. இ. காங்கிரஸ் கட்சி அவற்றைத் தனது சாதனைகள் என்றும், பிரரேபணைகளை தனது பிரரேபணைகள் என்றும் கூறி பொதுத் தேர்தலின்போது மக்களிடம் வாக்கு கேட்க முடியாது" என்று, ம. சோ. கட்சித் தலைவர் அசோக் மேத்தா கூறியிருக்கிறார்.

## மேலிடத்துடன் ஆலோசனை?

சாந்திகார், மே 11—

பஞ்சாப் மந்திரியான லாலா ஜகத் நாராயண் என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள இலஞ்சக் குற்றச்சாட்டுகள் பற்றி காங்கிரஸ் மேலிடத்துடன் விவாதிப்பதற்காக பஞ்சாப் முதன் மந்திரி பீம்சேன் சச்சார் டெல்லிக்குப் புறப்பட்டார்.

மந்திரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை ஒட்டி சாட்சியங்கள் பதிவு செய்யும் வேலை முடிந்துவிட்டதாயும், அவை பரிசீலனையிலிருப்பதாயும் சில நாட்களுக்கு முன் மந்திரி தெரிவித்திருந்தார்.

# புதுவையில் மே விழாப் பொதுக்கூட்டம்

## ஆலைத் தொழிலாளர் அவதி நீங்க தி. மு. கழகத் தீர்மானம்

"புதுவையில் மூன்று ஆலைகளிலும் தயாரித்துவந்த பொருள்களுக்கு வெளி நாடுகளில் விற்பனை ஆகும் வழிவகை இல்லாததால் மூட வேண்டிய அவல நிலை ஏற்பட்டுச் சுமார் மூன்று வாரங்களாகியும் இந்திய சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்காமலிருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இனியாகிலும் காலம் கடத்தாமல் அம்மூன்று ஆலைகளிலும் பணியாற்றிவந்த ஏழை தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில், இந்திய சர்க்கார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது,"

—என்ற தீர்மானம், புதுவையில் நடைபெற்ற மே தின விழாப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

8—5—55 மாலை 6-30 மணிக்கு புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைமை உரைக்குப்பின் தோழர்கள் என். வி. நடராசன் அவர்களும், ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் மே தினம் பற்றியும், திராவிடத் தொழிலாளர் நிலை பற்றியும், இந்திய யூனியனில் சேர்ந்துள்ள புதுவை மாவட்ட மக்களின் எதிர்கால நிலை பற்றியும், அவர்களின் கடமை பற்றியும் மிக விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக்கூறியதை மக்கள் ஆர்வத்தோடு கடைசிவரை கேட்டுக்கொண்டிருந்தனர்.

கூட்டத்திற்குச் சுமார் 10,000 மக்கள் வந்திருந்தனர். பெண்களும் 300-க்கு மேல் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எல்லா கிளைகளின் சார்பிலும் தனிப்பட்டோர்—தனிப்பட்ட கழகங்கள் சார்பிலும் சொற்பொழிவாளர்கட்கு ஏராளமான கைத்தறித் துண்டுகள் மாலையாக அணிவிக்கப்பட்டன.

அன்று காலை 8 மணி முதல், கழகத் தோழர்கள் 100 சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்று புதுவையைச் சுற்றியுள்ள 5 மைல் பிரதேசங்களில் பிரச்சாரம்செய்ததும், தோழர் சம்பத் தலைமையில் ஊர்வலம் சிறந்த முறையில் நடைபெற்றதும் புதுவைப் பகுதி மக்களிடையே பெருத்த வியப்பையும் பரபரப்பையும் உண்டுபண்ணிவிட்டன.

கூட்டத்திற்குத் தென்னாற்காடு மாவட்டக் குழுவினரான இரா. சாம்பசிவம், சொக்கலிங்கம், க.அறிவழகன், சித்தார்த்தன் முதலிய பலரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## 'மகாபோதி' மரம் பட்டுப்போகிறது!

### பாதுகாக்க ஏற்பாடு

பசல்பூர், மே 12—

எந்த மரத்தின் அடியில் புத்தர் 'நிர்வாணம்' பெற்றாரோ அந்த 'மகாபோதி மரம்' இப்போது 'பட்டு'ப் போகிறதாக செய்தி கிடைத்துள்ளது.

சரித்திர பிரசித்திப் பெற்ற அந்த மரம் 'பட்டு' வருவது குறித்து அண்மையில் அங்கு வந்து சென்ற பர்மியப் பிரதமர் யூ-நூ, வருத்தம் தெரிவித்தாராம்.

அவருடைய யோசனையின் பேரில், மாநில அரசாங்கம், பீகார் விவசாயக் கல்லூரித் தலைவரான டாக்டர் ஆர். ஹரிச்சர்யா என்பவரை அனுப்பி, அந்த மரத்தைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளைக் கண்டறியக் கோரியுள்ளனர் என்று தெரிகிறது.

### கவனமாகப் பரிசீலனை!

லண்டன், மே 11—

நான்கு வல்லரசு அதிபர்களும் சந்தித்துப் பேசுவதற்காக ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பை, ரஷ்யா 'மிகக் கவனமாகப் பரிசீலிக்கும்' என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின் வார்சா மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

## மூன்று புதிய இரயில் பாதைகள்

### இரண்டாம் திட்டத்தில் சேர்க்க ஆந்திர சர்க்கார் கோரிக்கை

ஆந்திர மாநிலத்தில் மூன்று புதிய இரயில் பாதைகளை அமைப்பதை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இந்தியப் பேரரசிடம் ஆந்திர சர்க்கார் வற்புறுத்தி, சிபாரிசு செய்துள்ளனராம்.

(1) மூதக்கூர், கடப்பா வழியாக நந்தயாலிலிருந்து பசாலாவிற்கு;

(2) மூதக்கூரிலிருந்து செல்லூருக்கு;

(3) பத்ராசலம் வழியாக விசாகபட்டணத்திலிருந்து கோந்தகுடம் நகருக்கு;—ஆகிய மூன்று இரயில் பாதைகளையும் அமைக்க வேண்டுமென அவர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

இரயில்வே போர்டாரே இவை பற்றி ஏற்கனவே ஆலோசித்து வருவதாயும், ஆனாலும், இதுவரை அவர்கள் திட்டமான முடிவு ஏதும் மேற்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

## நடமாடும் வாக்குப் பதிவு சாவடி

காஷ்மீரில், அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களில் வாக்குப் பதிவையும், வாக்கு சீட்டுகள் எண்ணுவதையும் துரிதப்படுத்துவதற்கென 'நடமாடும் வாக்குப் பதிவுச் சாவடி'கள் ஏற்படுத்துவது பற்றி காஷ்மீர் சர்க்கார் ஆலோசனை செய்து வருகின்றனராம்.

### சென்னை நகர சபைக்கு சர்க்கார் தரும் கடன்

சென்னை மிருகக் காட்சிச் சாலை அபிவிருத்திக்கு ரூ. 50,000; அயனாவரம், பூந்தமல்லி பெரிய சாலை, அபிராமபுரம் ஆகிய இடங்களில் 'மார்க்கெட்'டுகள் அமைக்கவும், சைதாப்பேட்டை 'மார்க்கெட்'டை அபிவிருத்தி செய்யவும் ரூ. 1,50,000; 'புல்டோசர்'கள், 'ரோட் ரோலர்'கள் வாங்க ரூ. 35,000-ஆக, அடுத்த ஆண்டு (1955—56) வரவு—செலவுகணக்கில் மொத்தம் ரூ. 2,35,000 நகர சபைக்குக் கடனாக ஒதுக்கப்பட்டிருப்பதாக சென்னை சர்க்கார் நகர சபை கமிஷனரிடம் தெரிவித்துள்ளதாம்.

## நிலை பெறுகிறதாம்!

"அரிசி விலை தற்போது நிலை பெற்று வருவதால், சர்க்கார் தரப்பில் நடவடிக்கை ஏதும் எடுக்கத் தேவையில்லை," என்று சென்னை மாநில விவசாய அமைச்சர் எம். பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

புது டெல்லியில் 20 கர்ப்பத் தடை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்க உதவியுடன் இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# நெல்மணி முற்றுமுன் அறுவடை!

விவசாயிகள் நடவடிக்கை

குளித்தலைக்கு அருகில் உள்ள மேட்டுமகாதானபுரம் என்னும் ஊரில், விவசாயிகள்—நிலப்பிரபுக்கள் தகராறு உருவாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

அவ்வூர் விவசாயிகள் பலர், நிலங்களில் நுழைந்து பயிர்களை அறுவடை செய்தனராம். இதனை நில உடைமைக்காரர்கள் ஆட்சேபித்தும் அவர்கள் தொடர்ந்து அறுவடையில் ஈடுபட்டனராம்.

கதிர்களோ இன்னும் அறுவடை செய்யக்கூடிய நிலைமை அடையவில்லை என்று நில உடைமையாளர்கள் கூறியிருக்கின்றனர்.

இந்தத் தகவல்களை அறிந்த குளித்தலை போலீஸ் இன்ஸ்பெக்டரும், தாலுகா அதிகாரியும் அங்கு விரைந்துள்ளனர் எனத் தெரிகிறது.

வாண வெடி வெடித்து

# குடும்பமே பலி!

ஸ்ரீகாகுளம், மே 12—

வாணவெடிகள் வெடித்ததின் விளைவாக இவ்வூரில் அன்னபூர்ணை என்ற பெயருடைய ஒரு பெண்மணியும், அவரது 5 குழந்தைகளும் பரிதாபமாக மரணமுற்றிருக்கின்றனர்.

மேற்படி அம்மையாரின் கணவர் நாராயண ராவ் என்பவர் வாண வெடிகள் தயாரிப்பதற்கான லைசென்ஸ் அனுமதி பெற்றவர் என்றும், அவர் தற்போது க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டிருப்பதால் அவ்வீட்டுத் திண்ணை மீது படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கையில் அவரது மனைவியார் வெளிக் கதவுகளை மூடிக்கொண்டு வீட்டுக்குள் வாணவெடிகள் தயாரித்துக்கொண்டிருந்ததாகவும், அவ்வாறு வெடிகள் தயாரித்துக் கொண்டிருக்கையில் அவை திடீரென வெடித்ததால் இவ்விபத்து சேர்ந்ததாகவும் தெரியவருகிறது.

வெடி விபத்து நேரிடுகையில், 10 மாதம் முதல் 18 வயது வரை உள்ள அவர்களது 5 குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தனராம். துணிமணிகளும், மற்றும் இதர பொருட்களும் தீப்பிடித்து வீடு முழுவதும் எரிந்துகொண்டிருந்ததால் அவர்கள் எவ்வகையிலும் வீட்டைவிட்டு வெளியேற இயலாதவர்களாகி நெருப்பிலகப்பட்டு கருகி இறந்தனர் என்று கூறப்படுகிறது.

தகவல் தெரிந்த உடனே தீ அணைக்கும் படையினரும், போலீசாரும் விரைந்து சென்று வீட்டின் கதவுகளை உடைத்து உள் நுழைந்து பார்த்த போது சில குழந்தைகள் அரைகுறை உயிருடன் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், உடனே அவர்களை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்தும் பயனில்லாமல் இறந்துவிட்டனர் என்றும் தெரிகிறது.

# உண்ணாவிரதமிருந்த மூன்று கல்லூரி மாணவர்கள் கைது

முசாபர்பூர், மே 11—

இங்குள்ள 'சிவில் எஞ்சினீயரிங்' கல்லூரியில் உண்ணாவிரதம் மேற்கொண்ட மூன்று மாணவர்களை போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

கடந்த ஜூலையில் சில கிராமவாசிகளுடன் செய்துகொண்ட தகராறுகளையொட்டி, ஒரு மாணவரைக் கல்லூரியிலிருந்து நீக்கியும், ஈடுபட்ட பலருக்கு அபராதம் விதித்தும் முடிவு மேற்கொண்ட கல்லூரி நிர்வாகத்தின் போக்கிற்கு எதிராகவே அந்த மாணவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனராம்!

********************

# தோழர் அண்ணாதுரை

அவர்கட்கு

திருமால்பூர் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

வட ஆர்க்காடு மாவட்டம் திருமால்பூர் பஞ்சாயத்து போர்டார், முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கட்கு 15-5-55-ல் வரவேற்பு இதழ் வாசித்தளிக்க முடிவு செய்துள்ளனர்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு சார்பில் வானொலி நிலையத்தைத் திறந்து வைப்பார்.

அன்று மாலை நடைபெறும் மே தின விழாப் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்.

********************

# இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

நிதிமந்திரி சுப்பிரமணியம் கருத்து

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எந்த அடிப்படையில் அணுக வேண்டுமென்பது பற்றி தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

ஆண்டொன்றுக்குத் தேசிய வருமானம் 5 சதவிகிதம் அதிகப்படவும், இன்னும் 5 ஆண்டுகளில் 120 லட்சம் பேருக்கு வேலை அளிப்பதுமே திட்டத்தின் இலட்சிய எல்லையாம்.

மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாக மட்டும், 90 லட்சம் பேருக்கு வேலை தர வேண்டியிருப்பதால், தற்போது வேலையற்றிருப்போரில் சுமார் 30 லட்சம் பேருக்கு வேலை கிடைக்குமாம்

நெய்வேலி திட்டத்தையும் மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு விட்டதாம். சென்னை மாகாணத்தில் கனரக மின்சார சாதனங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை ஏற்படுத்த மத்திய சர்க்கார் அனுமதி தந்தால், அத்திட்டத்திற்கும் மத்திய சர்க்கார் மூலதனம் தருமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை சர்க்கார் ரூ. 200 கோடி மதிப்பில் திட்டங்கள் சமர்ப்பித்ததாம்; ஆனால், தற்போது, அந்த மதிப்பீட்டுத் தொகையையும், திட்டத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதாம்.

முதலாவது திட்டத்தில் சென்னை மாகாணத்திற்கு ரூ. 86 கோடி ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் அத்தொகை இருமடங்காக ரூ. 172 கோடி கிடைக்கவேண்டும்; ஆனால் சர்க்கார் துறையில் இருமடங்கிற்குக் குறைவாக மூலதனம் போடப்படும் என்று தெரியவருவதால் சென்னையின் திட்டச் செலவையும் குறைக்க வேண்டிவருமாம்.

"இந்தக் கண்ணோட்டத்துடன், சென்னை சர்க்கார் தனது திட்டங்களை மாற்றி அமைக்க நேரிடும்," என்று அமைச்சர் கூறியிருக்கிறார்

வருகிற ஜூலை அல்லது ஆகஸ்டு திங்களில் நடைபெறும் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் சென்னை மாகில திட்டம் பற்றி விவாதிக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

# ரூ. 267 கோடி செலவில் மின்சார உற்பத்தி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாட்டில் மின்சார உற்பத்தி சக்தியை விரிவுபடுத்துவதற்காக ரூ. 267 கோடி செலவிடப் படுமாம்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வேலைகளுக்காக ரூ. 100 கோடி செலவிடப்பட்டிருக்கக் கூடுமாம்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

# இரா. நெடுஞ்செழியன் மதுரை வருகை

பொதுச்செயலாளர் 15-5-55-ல் மதுரை வருகிறார்.

**அன்று காலை 9-மணிக்கு மதுரை இரயில்வே நிலையத்தில் வரவேற்பும், மாலை ஊர்வலமும், பொதுக்கூட்டமும், மாநில மாநாட்டுக்கு நிதியளிப்பு விழாவும் நடைபெறும்.**

கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் வரவேற்பிலும், ஊர்வலத்திலும் கழகக் கொடிகளுடன் ஆயிரக்கணக்கில் வந்து கலந்துகொள்வதோடு, மாநில மாநாட்டிற்குப் படிப்பகங்களும், தொழிலாளர்களும், வர்த்தகர்களும், மாணவர்களும் பொருளுதவி செய்ய வேண்டுகிறோம்.

★

காலை 10 மணிக்கு அழகரடி வேலாயுத நினைவுப் படிப்பக ஆண்டு விழா.

மாலை 5 மணிக்கு திடீர்நகரிலிருந்து ஊர்வலம்.

மாலை 6 மணிக்கு கீழச்சந்தைப் பேட்டை வைகையாற்றில், அண்ணாதுரை இலவச படிப்பக ஆண்டு விழாவும், பாராட்டுப் பொதுக்கூட்டமும்.

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
காஞ்சி கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். முத்து
ஏ. வி. சௌந்தரராசன்

ஆகியோர் பொதுச்செயலாளர் அவர்களைப் பாராட்டி பேசுவர்.

குறிப்பு: தொண்டர்கள், தொண்டர் படை உடையுடன் காலை 7 மணிக்கு, மதுரை நகர் தி. மு கழகத்திற்கு வந்து சேரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## பொன்னேரி வட்ட கிளைக் கழக செயலாளர்கட்கு

"15—5—55 ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில், பொன்னேரி வட்ட கிளைக் கழக செயலாளர்கள் கூட்டம் கும்மிடிபூண்டியில் நடைபெறும். அதுபோது, பொன்னேரி வட்டக் குழுவை நிறுவுவது பற்றி முடிவு செய்யப்படும்; தொடர்புடைய கழகத் தோழர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு தவறாது வருகை தரக் கோருகிறேன்."

என்று, கும்மிடிபூண்டி தி. மு. கழகச் செயலாளர் ப. செ. தூயமணி அறிவிக்கிறார்.

## மாயூரம் தி. மா. மு. கழகச் செயற் குழுக் கூட்டம்

15—5—55 காலை 9 மணியளவில் கூறைநாடு ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தில், மேற்படி கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். புத்தாண்டு நிர்வாகிகள் தேர்வு, கழக இரண்டாவது ஆண்டு விழா ஆகியவை பற்றி முடிவெடுக்கப்படும். அன்று மாலை 4 மணிக்கு கூறைநாடு இளங்கோ மன்றத்தின் புதிய கட்டிடத்தை தோழர் இராமையா திறந்துவைப்பார். தோழர்கள் பலர் பேசுவர்.

## அ. இ. ஆர். எம். எஸ். ஊழியர்கள் (3வது வகுப்பு) சங்க முதல் மாநாடு

15—5—55 மாலை 5 மணிக்கு, மேற்படி சங்கக் கிளையின் முதல் வருடாந்திர மாநாடு, சென்னை, தங்கசாலைத் தெரு 36-ம் எண்ணுள்ள இல்லத்தில் திரு. கே. வி இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். மாநாட்டை திரு. ஜி. இலட்சுமணன் அவர்கள் திறந்து வைப்பார். தமிழ் நாடு காங்கிரஸ் குழு தலைவர் பி. கக்கன், திரு. கே. ஜெகதீசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

# கழகக் கூட்டங்கள்

**கோடம்பாக்கம்—சென்னை**
தி. மு. கழக 2-ம் ஆண்டு விழா
14—5—55 மாலை 6 மணிக்கு
வன்னியர் வீதி, புலியூர்
தலைவர் : சோ. கிருட்டிணமூர்த்தி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சத்தியவாணிமுத்து
க. இளங்கீரன்

★

**புதுக்கோட்டை**
திலகர் திடலில்
15—5—55 மாலை 6½ மணிக்கு
தலைவர் : எச். தங்கசாமி
பேசுவோர் :
அருண்மொழி
பூங்கோதை

★

கமுதி
மீனாட்சி கோவில் முன்னர்
15—5—55 ஞாயிறு மாலை
தலைவர் : வே. தங்கப்பாண்டியன்
பேசுவோர் :
எம். எஸ். இராமசாமி
எஸ். எஸ். தென்னரசு
நா. திராவிடதாசன்

★

நாகப்பட்டினம்
அவுரித் திடலில்
15—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
சி. ஜம்பு

# நெல்லை மாவட்ட தி. மு. கழகக் கிளைகள் செயலாளர்கட்கு

"நெல்லை மாவட்ட தி. மு. கழகக் குழு 15—5—55 காலை 10½ மணிக்கு தூத்துக்குடியில் செல்விசியர் பங்களா, சி. எம். பாடசாலையில் நடைபெறும். அதுபோது மாநில மாநாட்டு நிதி வசூல்; எதிர்கால ஆக்க வேலை; பொதுச்செயலாளர் வரவேற்பு; அண்ணா வருகை; செயலாளரால் கொண்டுவரப்படும் இதர பிரச்சினைகள் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும். மாவட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் மாவட்டக் கிளைக் கழகச் செயலாளர்களும் விசேட அழைப்பாளர்களாகக் கலந்துகொள்ள வேண்டுகிறேன். வருபவர்கள் முன்கூட்டியே தெரிவித்தால் உணவு ஏற்பாடு செய்ய ஏதுவாக இருக்கும்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே வி. கே. சாமி அறிவிக்கிறார்.

# இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்

"இராமநாதபுரம் மாவட்ட தி. மு கழகப் பொதுக்குழுக் கூட்டம் 15—5—55 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு கமுதி தி.மு.கழக அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது மாநில மாநாடு நடத்துவது, அண்ணா அவர்களை நமது மாவட்டத்திற்கு சுற்றுப்பிரயாணம் செய்ய அழைப்பது ஆகியவை குறித்து ஆலோசிக்க வேண்டியிருப்பதால், மாவட்டப் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் இ.ல ம. சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

தி.மு.க. பொதுச்செயலாளர்

# நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மே 14: மாலை 3-30 மணி :
நாமனூர்
இரவு 7 மணி :
சிவகங்கை
15 : மதுரை
16 : திருக்காட்டுப்பள்ளி
17 : சிதம்பரம்

# மே விழாக் கூட்டம்

விழுப்புரம்
சண்முகம் பூங்காவிற்கு
அருகிலுள்ள திடலில்
15—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : இரா. சாம்பசிவம்
பேசுபவர் : சு. சித்தார்த்தன்

## சென்னை 10-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

15—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, கழகச் செயற்குழுக் கூட்டம் சத்தியவாணிமுத்து இல்லத்தில் (8, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு) நடைபெறும். அதுபோது, கழக ஆக்க வேலைகள் பற்றி ஆராயப்படும்.

## சென்னை 23-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

15—5—55 காலை 10 மணிக்கு சம்மாள்வர்பேட்டை சின்ன பாபு தெருவில் (கழக அறையில்) செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

## சென்னை 26-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

15—5—55 ஞாயிறு காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில் செயற்குழு கூட்டம் நடைபெறும். அதுபோது, ஆண்டு விழாப் பொதுக் கூட்ட வரவு-செலவு பரிசீலனை செய்யப்படும்.

## சென்னை 37-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

15—5—55 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் வரவு-செலவு கணக்குகள், கழகத்தின் ஆக்க வேலை, மற்றும் சில விடயங்கள் குறித்து முடிவு செய்யப்படும்.

## சென்னை 50-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

14—5—55 இரவு தி மு. கழக பணிமனையில், கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக மனை மாற்றம், மாநில மாநாட்டுக்கு செல்லும் முறை ஆகியவை பற்றி ஆராயப்படும்.

## திருச்சி 20-வது வட்டார தி. மு. கழகத் தோழர்கட்கு

14—5—55 காலை 10 மணியளவில், கிளைக் கழகக் கட்டிடத்தில், கழகச் செயற்குழு கூட்டம் நடைபெறும்.

## 'வீர சிவாஜி'—நாடகம்

15—5—55 இரவு 10 மணிக்கு, உடுமலை பிரேவோ டாக்கிசில், உடுமலை திராவிட மாணவர் முன்னேற்றக் கழக நிதிக்காக 'வீர சிவாஜி' எனும் நாடகம் நடைபெறும்.

## திருமணம்

15-5-55 மாலை 6-30 மணிக்கு, பம்பாய் பொய்சேர், ரிபேலோசால் 4-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் ஏ. இராமசாமி தலைமையில், தோழர் முத்தையா—தோழியர் பாக்கியத்தாய் திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.